வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 29.1.2026 நேரம்-மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

இந்தியா தற்போது, **நீண்ட காலத் தீர்வு**களை நோக்கிய பாதையில் பயணித்து வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் **மொத்த உள்நாட்டு உற்பத்தி**, 7.4 சதவிகிதம் வளரும் என, **பொருளாதார ஆய்வறிக்கை**யில் மதிப்பிடப் பட்டுள்ளது.

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட ராணுவத்தினர் **பாசறை திரும்பும் விழா** புதுடெல்லியில் இன்று மாலை நடைபெறுகிறது.

புதுச்சேரியில் வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **வேளாண் விழா** மற்றும் 36 ஆவது **காய்-கனி-மலர் கண்காட்சி,** தாவரவியல் பூங்காவில் நாளை தொடங்க உள்ளது.

மோடி பேட்டி 1(10)

இந்தியா தற்போது, நீண்ட கால பிரச்சனைகளில் இருந்து, நீண்ட கால தீர்வுகளை நோக்கிய பாதையில் பயணித்து வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் **சீர்திருத்த எக்ஸ்பிரஸ்** வேகம் பிடித்திருப்பதால், நாடாளுமன்றத்தை தீர்வுகளின் மேடையாக பயன்படுத்த வேண்டுமே தவிர, தடைகளின் களமாக அல்ல என்றார். ஜனநாயகத்தின் கோவிலான இந்தியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டின் திறன்களையும், ஜனநாயகம் மீதான அர்ப்பணிப்பையும், உலகிற்கு எடுத்துக் கூறும் வகையில் செயல்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். பிரதமரின் பேட்டி குறித்து கூடுதல் தகவல்கள்.......

**(வாய்ஸ்)**

மோடி பேட்டி 2(12)

**(வாய்ஸ்)**

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், அடுத்த 25 ஆண்டுகள் மிக முக்கியமானதாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். இதுகுறித்த 140 கோடி இந்தியர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் அறிக்கையாகவே குடியரசு தலைவரின் நாடாளுமன்ற உரை அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையே, அண்மையில் எட்டப்பட்டுள்ள வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவின் உற்பத்தி மற்றும் போட்டித் திறனை அதிகரிப்பதில், முக்கிய நடவடிக்கையாக திகழும் என்று பிரதமர் கூறினார். இந்த உடன்பாட்டினால் புதிதாக திறக்கப்பட்டுள்ள வர்த்தக வாய்ப்புகளை இந்திய உற்பத்தியாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*நிர்மலா 1* (7)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று மக்களவையில், நடப்பு நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார். நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 7.4 சதவிகிதம் வளரும் என இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரவிருக்கும நிதியாண்டில் வளர்ச்சி, 6.8 முதல், 7.2 சதவிகிதம் வரை இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார ஆய்வறிக்கை குறித்து கூடுதல் விவரங்கள்................

**(வாய்ஸ்)**

**(வாய்ஸ்)**

உள்நாட்டு தேவைகள் அதிகரித்து வருவது, வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமையும் என்றும், தனியார் நுகர்வு மற்றும் முதலீட்டு பெருக்கத்தினால் வளர்ச்சி ஊக்கம் பெறும் என்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொருளாதாரத்தில் சேவைத் துறையின் பங்களிப்பு முக்கியமானதாக நீடிக்கும் என்றும், உற்பத்தி துறை வலுவடைந்து, வேளாண் துறை **ஸ்திரம் பெறும்** என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

உலக அளவில் பல்வேறு புவி-அரசியல் பிரச்சனைகள் காரணமாக பொருளாதார சூழலில், நிச்சயமற்ற தன்மை நீடிக்கின்ற போதிலும், அண்மைக் காலங்களில் உலகப் பொருளாதாரத்தின் செயல்பாடுகளில் நெகிழ்வுத் தன்மை தென்படுவதாக பொருளாதார ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*நிர்மலா 3* (10)

பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, மக்களவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. பின்னர் மாநிலங்களவையிலும், பொருளாதார ஆய்வறிக்கையின் நகல் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, மாநிலங்களவையும் ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்றம் வரும் 1 ஆம் தேதி மீண்டும் கூடும்போது, வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் மக்களவையில் தாக்கல் செய்யப்படும்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதி அடுத்த மாதம் 13 ஆம் தேதி வரையிலும், 2 ஆம் பகுதி மார்ச் 9 முதல், ஏப்ரல் 2 ஆம் தேதி வரையிலும் நடைபெறும். பட்ஜெட் கூட்டத் தொடரில், மொத்தம் 30 அமர்வுகள் நடைபெற உள்ளன.

உயர் கல்வி (11)

உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ மேம்பாட்டிற்கான பல்கலைக்கழக மானியக்குழுவின் புதிய விதிமுறைகளை நிறுத்தி வைத்து, உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. முதல் நோக்கு அடிப்படையில், தெளிவற்ற இவ் விதிமுறைகள், துஷ்பிரயோகம் செய்யப்பட, வாய்ப்புகள் இருப்பதாக தலைமை நீதிபதி திரு சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, பிரச்சனை குறித்த ரிட் மனுக்கள் மீதான விசாரணையின் போது கூறியது. புதிய விதிமுறைகளை, புகழ் பெற்ற நீதித்துறை வல்லுனர்கள் அடங்கிய குழு ஒன்றின் மூலம் மறு ஆய்வு செய்யலாம் என்றும் நீதிபதிகள் ஆலோசனை வெளியிட்டனர். ரிட் மனுக்கள் மீது, மத்திய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு நோட்டீஸ் அனுப்பவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பேச்சு சுதந்திரம் (11)

பேச்சு சுதந்திரம் அடிப்படை உரிமைதான் என்றாலும், இது, வரையற்ற உரிமை அல்ல என்றும், அவதூறு பேச்சுகளை நியாயப்படுத்த இந்த சுதந்திரத்தை பயன்படுத்த முடியாது என்றும் டெல்லி உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. மற்றவர்களின் மரியாதை மற்றும் கண்ணியத்தை குலைக்கும் நோக்கத்துடன், வேண்டுமென்றே பேசப்படும் வார்த்தைகளுக்கு, அரசியல் சாசன பாதுகாப்பு கிடையாது என்று நீதிபதி ஜோதிசிங் இன்று பிரச்சனை தொடர்பான வழக்கு ஒன்றில், விசாரணையின் போது கூறினார். வழக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர், நிறுவனத்தின் நற்பெயரை குலைக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே சமூக ஊடகங்களில் வெளியிட்ட பதிவுகளை நீக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மோடி-ராணுவம் (11)

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட ராணுவத்தினர் **பாசறை திரும்பும் விழா** புதுடெல்லியில் இன்று மாலை நடைபெறுகிறது. குடியரசு தின கொண்டாட்டங்கள் முடிவடைவதை குறிக்கும் வகையிலான இவ்விழாவின் போது, இந்தியாவின் வளமான ராணுவ பாரம்பரியம், விரிவான முறையில் காட்சிப்படுத்தப்படுகின்றன.. நாட்டின் பாதுகாப்பிற்காக உயிரையே அர்ப்பணிக்கும், பாதுகாப்பு படையினர் குறித்து, நாடே பெருமிதம் அடைவதாக, சமூக ஊடகப்பதிவு ஒன்றில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். ராணுவத்தினர் பாசறை திரும்பும் விழா, பாதுகாப்பு படையினரின் ஒற்றுமை,

மற்றும், ஒழுங்குக் கட்டுப்பாட்டையும், காலம் கடந்த மரபுகளையும் குறிப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகள் கூட்டம் (6)

இந்தியாவிற்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு அமைச்சக கூட்டம் புதுடெல்லியில் வரும் 31 ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்தியாவும், ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்து இக் கூட்டத்திற்கு தலைமை ஏற்க உள்ளன. கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, சூடான், பாலஸ்தீன், கோமரோஸ் உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், ஏற்கனவே இந்தியா வந்து சேர்ந்துள்ளனர்.

*அஜித் பவார்* (11)

நேற்று விமான விபத்தில் உயிரிழந்த மகராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவாரின் இறுதி சடங்குகள் இன்று பாராமதியில், முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றன. மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு நிதின் கட்கரி, மகராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னவிஸ், துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த், பிஜேபி தலைவர் திரு நிதின் நபின், NCP-SP கட்சியின் தலைவர் திரு சரத் பவார், மற்றும் பவார் குடும்பத்தினர், இறுதிச் சடங்களில் கலந்து கொண்டனர். முன்னதாக, கட்டேவாடி கிராமத்தில், அஜித் பவாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு, MNS தலைவர் திரு ராஜ் தாக்கரே உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும், ஆயிரக்கணக்கிலான மக்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

*அஜித்பவார் சேர்க்கை (7)*

நேற்று அஜித்பவார் பயணித்தபோது விபத்துக்குள்ளான விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும், விபத்து குறித்த விசாரணைகள், முன்னுரிமை அடிப்படையில் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. உரிய செயல்பாட்டு நடைமுறையின் கீழ், காலக்கெடு அடிப்படையில் விசாரணைகளை நடத்தி முடிக்க அமைச்சகம் உறுதிப்பாடு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி கண்காட்சி* (11)

புதுச்சேரியில் வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேளாண் விழா மற்றும் 36 ஆவது காய்-கனி-மலர் கண்காட்சி தாவரவியல் பூங்காவில் நாளை தொடங்க உள்ளது. இந்த 3 நாள் விழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் உள்ளிட்டோர் தொடக்க விழாவில் பங்கேற்கிறார்கள். பிப்ரவரி 1 ஆம் தேதி தாவரவியல் பூங்காவில் நடைபெற உள்ள நிறைவு விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு கண்காட்சியை முடித்து வைக்கிறார். சட்டப்பேரவை தலைவர் திரு ஆர்செல்வம், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் உள்ளிட்டோர் நிறைவு விழாவில் பங்கேற்கின்றனர்.

வானிலை (13)

வரும் 31 ஆம் தேதி வரை, தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பிப்ரவரி 1 ஆம் தேதி தென்தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், லேசான மழை பெய்யக் கூடும் என்றும், 2-3 ஆகிய தேதிகளில் தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களில், லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 31 ஆம் தேதி வரை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவள்ளுர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்றும், சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் லேசான பனிமூட்டம் இருக்கலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் கொடைக்கானலில் 6.4 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட் (5)

மகளிர் கிரிக்கெட்டில், உத்திரபிரதேஷ்-பெங்களுரு அணிகளுக்கு இடையிலான WPL போட்டி, வதோதராவில் இன்று மாலை நடைபெற உள்ளது. ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஆவது மற்றும் இறுதி 20 ஓவர் போட்டி திருவனந்தபுரத்தில் வரும் சனிக்கிழமை நடைபெறும்.

மேகாலயா (8)

மேகாலயாவின் **காசி மற்றும் ஜைந்தியா** மலைப் பகுதிகளில், உயிருள்ள **அத்தி மரத்**தின் வேர்களையே **வலைப் பின்னலாக வளர விட்டு**, ஆறுகள் மற்றும் பள்ளங்களின் குறுக்கே, பழங்குடி மக்களால் உருவாக்கப்படும் அதிசயமான, **வாழும் வேர்ப் பாலங்**களை, **யுனெஸ்கோ மரபுச் சின்னங்**கள் பட்டியலில் சேர்க்க இந்தியா விண்ணப்பித்துள்ளது. உயிருள்ள கலாச்சார சின்னங்களை பாதுகாப்பதிலும், இது தொடர்பான யுனெஸ்கோ முயற்சிகளை முன்னெடுத்து செல்வதிலும் இந்தியாவின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், இந்நடவடிக்கை அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஓம்பிர்லா (13)

16 ஆண்டு இடைவேளைக்கு பின்னர் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற, காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்ற தலைவர்கள் மாநாடு, மிகவும் வெற்றிகரமான முறையில் அமைந்ததாக, இன்று மக்களவையில் சபாநாயகர் திரு ஓம்பிர்லா தெரிவித்தார். கடந்த 15 ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்த இம்மாநாட்டில், 53 காமன்வெல்த் நாடுகள் மற்றும் பல்வேறு அழைப்பு நாடுகளில் இருந்து நாடாளுமன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர். அழைப்பு நாடுகளை சேர்ந்த சுமார் 40 நாடாளுமன்ற தலைவர்களுடன், மக்களவை தலைவர் திரு ஓம்பிர்லா, இருதரப்பு கூட்டங்களையும் நடத்தினார். இந்தியாவின் வலுவான, துடிப்பான நாடாளுமன்ற ஜனநாயகத்தை இவர்கள் அனைவரும் பாராட்டியதாக மக்களவையில் திரு ஓம்பிர்லா கூறினார். இந்தியாவுடன் நட்பு ரீதியில் வலுவான ஒத்துழைப்பைப் பேண இவர்கள் விருப்பம் வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

--------